எடுத்துவந்து உடனடியாக சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய அரிய யோசனைக்கு நன்றி. ஆனால் நிதி வசதிகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ரா. சேதுநாதன்.

திரு. ரா. சேதுநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரில் இருக்கிற கால்நடை மருத்துவமனை வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. அதனால் மிகச் சிரமமாக இருக்கிறது. அதற்கான இடமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அரசு தனி இடம் ஒதுக்கியிருக்கிறது. அதில் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 196, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

196—

மீன்வளக் கல்லூரி அமைத்தல்

* **1104—திரு. இரா. பெர்னார்டு :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் வளக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதிக மீன்பிடித் தொழில் நடைபெறும் இடத்தில் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

1996 ஆகஸ்ட் 21]

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

திரு. இரா. பெர்னார்டு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி கடலில் மிகப் பெரிய மீன் மடை உள்ளது. அதாவது fishing ground, உலக அளவில் அதை `wadge bank' என்று அழைக்கிறார்கள். இங்கே பல்வேறு மீன் வகைகளான திரச்சி, கணவாய், வஞ்சிரம், ஷீலா, இறால் போன்றவைகள் கிடைக்கின்றன. இவையெல்லாம் அதிக ருசி கொண்டவையாகும். ஒப்பிட்டுச் சொல்வதென்றால், சேலம், தருமபுரி, ராஜபாளையம், திருவில்லிப்புத்தூர் போன்ற இடங்களில் விளைகின்ற மாம்பழங்களை விட அதிக ருசி கொண்டவை என்று மீனவர்கள் சொல்வார்கள். பல்வேறு பருவ காலங்களில் இந்த வகை மீன்கள் கிடைக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாம்பழத்தின் சுவை வேறு, மீன் சுவை வேறு.

திரு. இரா. பெர்னார்டு : அதை விட அதிகம் என்று சொல்வார்கள். கடலுக்குள் வித்தியாசமான தூரத்திலும், ஆழத்திலும் பல்வேறு கிலோ மீட்டர் தூரத்திலும் பல்வேறு வகையான மீன்கள் கிடைக்கின்றன. இந்த விவரங்களை மீனவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு, காலத்திற்கும், பருவத்திற்கும், ஆழத்திற்கும், தூரத்திற்கும் ஏற்ப தொழில் செய்து வாழவேண்டிய நிலையில் இருப்பதால், இதுபோன்ற ஒரு மீன்வளக் கல்லூரி இருந்தால் மிகவும் உதவியாக இருக்கும். அதுமட்டுமல்ல, மீன் உற்பத்தியில் இந்த நிலையில் தமிழகம் உலகில் 7-வது இடத்திலும், ஆசியாவில் முதல் இடத்திலும் இருக்கிறது. இது அன்னிய செலாவணியை ஈட்டி, இந்தியத் துணைக் கண்டத்திற்கு, தமிழகத்திற்கு, குறிப்பாக மீனவர் நலனுக்கு உதவியாக இருக்கிற காரணத்தால், கருணைமிக்க கலைஞர் அவர்கள் முதல்வராக இருக்கிற இந்தக் காலக் கட்டத்தில், இதனை மறுபரிசீலனை செய்து - மீனவர்களின் கண்ணீரைத் துடைக்க எந்த அரசும் முன்வரவில்லை, இந்த அரசு தான் முன்வந்து இருக்கிறது - ஒரு கல்லூரி அமைக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10- 20

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக மீன் வளக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால் 100 ஏக்கர் சமன்பாடான நிலமும், ரூபாய் பத்து கோடியும் தேவைப்படும். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மிக அருகில்

[1996 ஆகஸ்ட் 21

வ.உ.சி. மாவட்டத்தில், தூத்துக்குடியில் ஏற்கனவே மீன் வளக் கல்லூரி ஒன்று உள்ளது. இந்தக் கல்லூரி 1977 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதிலே ஆண்டுக்கு 25 மாணவர்கள் பட்டப் படிப்பிற்காகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இந்தக் கல்லூரியில் 1991-92 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட இடங்கள் 25. ஆனால் மாணவர்கள் சேர்க்கையோ 15. இடையில் 2 பேர்கள் நின்று விட்டார்கள். 1993-ல் 23 பேர்கள் சேர்ந்து 4 பேர்கள் இடையில் நின்றார்கள். அதைப்போல 1994 ஆம் ஆண்டு 16 பேர்கள் மட்டும் தான் படிப்பதற்குச் சேர்ந்தார்கள். 1995 ஆம் ஆண்டில் 21 பேர்கள். 1996-ல் இப்போது 22 பேர்கள் தான் படித்து வருகிறார்கள். இன்னும் 3 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, இந்தக் கல்லூரியில் வேண்டுமென்றாலும்கூட இடங்களை அதிகப்படுத்திக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. டி. மணி.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1994-95 ஆம் ஆண்டில் சிவலோகம் பகுதியில், சிற்றாறு 2-வது அணைக்கட்டு பகுதியில் ஏற்கனவே மீன் வளர்ப்பதற்காக பல்வேறு திட்டங்கள் அங்கே நிலுவையில் உள்ளன. அந்தப் பகுதியில் 1993-94 ஆண்டு வாக்கில் ஒரு பரிந்துரை அரசுக்கு வந்ததாகக் கூறப்பட்டது. அப்படி அந்தப் பகுதியில் இந்த வசதிகள் எல்லாம் இருக்கிற காரணத்தால் ஒரு கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது என்னிடம் குறிப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 197, திரு. செங்கை சிவம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

197—

நிலம் ஒதுக்கீடு செய்தல்

***635—திரு. செங்கை சிவம் :**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் பொது நிறுவனமான சிட்கோ மூலம் கடந்த ஆண்டுகளில் நிலம் ஒதுக்கீடு செய்ததில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை என்ன ?